2022 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கிற அணைக்கரை கிராமத்தில், உறுப்பினர் கேட்கின்ற கோரிக்கையை எங்கள் துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அதற்கான பணிகளை இந்த வருடமே செய்து தருவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***4168—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் என்பது கோவில்பட்டியிலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. பேருந்து வசதி அதிகம் இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய வாகனப் போக்குவரத்து, ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை போன்றவற்றைப் பொறுத்து புதிய வட்டாரப் போக்குவரத்துக் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராயும். தற்பொழுது அங்கே வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவாக இருப்பதால் விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

[2022 ஜனவரி 7

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளத்தோடு தமிழகத்தை வழிநடத்துகிற தாய்த் திருநாட்டின் தவப் புதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். விளாத்திகுளம் சட்டப் பேரவை தொகுதியானது, தூத்துக்குடி மாவட்டத்தில் 35 சதவிகித நிலப்பரப்பைக் கொண்டதாகும். ஏறக்குறைய 680 கிலோ மீட்டர் மாநிலச் சாலையும், 75 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையும், ஏறக்குறைய 600 கிலோ மீட்டர் ஒன்றியச் சாலைகளையும் உள்ளடக்கிய பகுதி. இந்தப் பகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் முழுவதையும், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளையும், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் 25 ஊராட்சிகளையும் கொண்ட ஒரு பெரிய பகுதி. விளாத்திகுளம் தொகுதிக்கு அருகிலே ஏறக்குறைய 45 கிலோ மீட்டர் எல்லையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியும் இருக்கிறது. எங்கள் தொகுதியின் பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கையைக் கருத்தில்கொண்டு, மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய பகுதியை முன்னேற்றம் செய்திட மாண்புமிகு தமிழக முதல்வருடைய நல்லாட்சியில் விளாத்திகுளத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைவதற்கு ஆவன செய்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு 1,39,559 பேர் வாழ்ந்து வருகிறார்கள். நாள் ஒன்றுக்கு 4 வாகனப் பதிவுகளும், 4 ஓட்டுநர் உரிமங்களும்தான் அங்கே பதிவு செய்யப்படுகின்றன. 5 தகுதிச் சான்றிதழ்கள்தான் வழங்கப்படுகின்றன. வட்டாரப் போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கான செலவு, மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், எரிபொருள் கட்டணம் இவற்றையெல்லாம் கணக்கில்கொள்கிறபொழுது, 64 இலட்சம் ரூபாய் செலவாகின்றது. ஆகவே, விளாத்திகுளத்தில் புதிதாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எதிர்காலத்தில் வேண்டுமானால் அந்தப் பகுதி மக்கள்தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கையின்

அடிப்படையிலே அதைப் பரிசீலிக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது விளாத்திகுளம் பகுதி அதிகமான தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற பகுதியாக இருக்கிறது. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பகுதி, பல தொழில்முனைவோர்கள் உருவாகின்ற பகுதியாகவும் இருப்பதால், இதனைக் கருத்திற்கொண்டு, வருகிற காலங்களில் இப்பகுதியினுடைய தரத்தை முன்னேற்றுவதற்கு பொற்கால தமிழகத்தினுடைய முதல்வர், தவறுகள் செய்தவர்களையும் தாயுள்ளத்தோடு மன்னிக்கிற தமிழகத்தினுடைய தவப்புதல்வருடைய நல்லாட்சியில் விளாத்திகுளத்தில் எதிர்காலத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

தினசரி ஊதியம்

***2794—திரு. பொன். ஜெயசீலன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பெறும் தினசரி ஊதியத்தினை ரூ.500/– ஆக உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?